**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 44/1998**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **19.01.2026** |
| **பெயர்** | **லலித் ஜி ஜெயின்** |
| **த/பெ** | **கேவர்ஜன்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.20 எ.எம்.**

**2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

6. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் விவசாயம் செய்தாரா என்ற வவிரம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி காத்தவராயன் மற்றும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் 1ம் பிரதிவாதி வெவ்வேறு நபர்களிடம் பயிர் செய்ய வாரத்திற்கு விட்டிருந்தார் என்று குறிப்பிட்டு இருந்தது அதன் விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. அதுபோல் எதுவும் விடவில்லை.

7. வழக்கு சொத்தை எங்களுக்கு கொடுப்பதற்கு முன்பு 1ம் பிரதிவாதி வெவ்வேறு நபர்களிடம் பயிர் செய்ததாக குறிப்பிட்டு இருந்த சங்கதியை எதிர்த்து பதில் உரை ஏதேனும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அது குறித்து தெரியாது. கிரையப்பத்திரம் ஏற்படுத்திய நாளில் கூட 1ம் பிரதிவாதி ஸ்வாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. ஸ்வாதீனத்தில் தான் இருந்தார் கிரைம்பத்திரம் மூலம் ஸ்வாதீனமும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

8. எங்கள் தரப்பில் தாக்கல் செய்த கிஸ்து ரசீதுகள் 1ம் பிரதிவாதி பெயரில தான் உள்ளது என்றால் சரியல்ல. என் தந்தையின் பெயரில் தான் உள்ளது. 1985 மற்றும் 1986 என இரண்டு கிஸ்து ரசீதுகளில் எந்த ரசீது என் தந்தையின் பெயர் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. என் தந்தை வழி தாத்தாவின் பெயர் கிரையப்பத்திரத்தின்படியும், பிராதில்

குறிப்பிட்டுள்ளது போலும் கிஸ்துர்சந்ராத்துார் என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் 1ம் வாதியின் தந்தை பெயர் தேவன்சந்த் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் தவறாக குறிப்பிட்டுள்ளது.

9. பட்டாவில் பெயர் தவறாக உள்ளது என்று பிரதிவாதிகள் 2 மற்றும் 3 அவர்களின் பதிலுரையில் குறிப்பிட்டும் அதனை விளக்கும் வகையில் என் பிரமாணவாக்குமூலத்தில் சுட்டிக்காட்டவில்லை என்றால் தெரியவில்லை, எனக்கு அவ்வளவாக படிக்க தெரியாது. அவ்வாறு இருக்கையில் என் பிரமாணவாக்குமுலத்தை நான் படித்து ப்பார்க்கவில்லையா என்றால் படித்துக்காட்டினார்கள். வா.சா.ஆ-2 என் தந்தைக்கு கொடுக்கப்பட்டதாக நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவாவை தாக்கல் செய்த போதே பெயர் மாறியுள்ளது தெரியும்.

10. அவ்வாறு இருக்கையில் இந்த வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. என் தகப்பனார் வரி செலுத்தியதற்கான எந்த கிஸ்து ரசீதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ள எல்லா ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துவிட்டேன். என் தந்தை வழக்கு சொத்தில் ஸ்வாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தான் நான் கிஸ்து ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்தபோது உடன் தாக்கல் செய்த இடைக்கால தடை உத்தரவு கோரிய மனுவிலும் என் தந்தை வழக்கு சொத்தில் ஸ்வாதீனத்தில் உள்ளதாக கூறவில்லை என்றால் கூறியுள்ளார்.

11. எனது பிரமாணவாக்குமூல்தில் என் தந்தைதான் ஸ்வாதீனத்தில் உள்ளதா எங்கும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. நாங்கள் தான் ஸ்வாதீனத்தில் இருந்து வந்தோம். வழக்கு சொத்தின் சர்வே எண்ணிற்கு வடக்கு புறம் 1ம் பிரதிவாதியின் சர்வே எண் 80/1எ நிலம் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2ம் மற்றும் 3 ம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் நிலத்திற்கு அவர்களின் நிலத்தின் மூலமாக தான் வழக்கு சொத்து நிலத்திற்கு விவசாயம் செய்ய தண்ணீர் பாய்ச்சி வருகிற விவரத்தை நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க மனு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

12. மேற்கூறிய சங்கதியை வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் நிரூபணம் செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அப்போது என் தந்தை அந்த அறிக்கைக்கு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1985 ம் ஆண்டிற்கு முன்பே 1ம் பிரதிவாதி என் தந்தைக்கு அதிக அளவில் பணம் கொடுக்க வேண்டி இருந்தது என்றால் சரிதான். அதனால் தான் 21.01.1985ல் கிரையப்பத்திரம் ஏற்படுத்தியபோது 1ம் பிரதிவாதிக்கு எந்த கிரையத் தொகையும் என் தந்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு இருந்த கிரையத்தொகை தெரியுமா என்றால் தோரயாமாக ரூ. 40,000/- என்று நினைவு இருக்கிறது. அதனால் அந்த கிரையப்பத்திரத்தில் என் தந்தை 1ம் பிரதிவாதிக்கு ரொக்கமாக பணம் கொடுத்தார் என்று குறிப்பிட்டு இருந்தால், அது தவறு என்றால் சரியல்ல. சாட்சி தற்போது மாற்றி கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் கிரையத்தொகை கொடுக்கப்பட்டது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 11.48 எ.எம்.**